## III. மகாவங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

1962ம் ஆண்டிற்கான மகாவங்கியின் நிதிக் கணக்குகள், பின்னிணைப்பு 11 அட்டவணை 6-ல் கொடுக்கப்பட்டுள்ளன. 1961ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள் பின்வருமாறு.

| | மாற்றம் | |
|---|---|---|
| | பத்து லட்சம் ரூபாய் களில் | சதவீதம் |
| மொத்தக் கேள்விப் பொறுப்புக்கள் .. .. | +107.5 | +10.9 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்கள் .. .. | + 25.6 | + 3.3 |
| கேள்வி வைப்புக்கள் .. .. .. .. | + 81.9 | +37.3 |
| (இதில் வர்த்தக வங்கிகள்) .. .. .. | + 20.1 | +23.2 |
| சர்வதேச ஒதுக்குநிதி .. .. .. .. | – 32.6 | –17.7 |
| உள்நாட்டு இருப்புச் சொத்துக்கள் .. .. | +158.2 | +17.1 |
| அரசாங்கப்பிணைகளும், உத்தரவாதப் பிணைகளும் .. | +175.8 | +24.8 |

+ ஏற்றம்
– இறக்கம்

சர்வதேச ஒதுக்குநிதியை நாணயம், கேள்வி வைப்புக்கள் ஆகிய பொறுப்புக்களின் விகிதாச்சாரமாக நோக்கின், இவை 1961ம் ஆண்டு முடிவுக்குரிய 18.8 சதவீதத்திலிருந்து 1962ம் ஆண்டு, 13.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றன.

மகாவங்கியின் ஐக்கிய அமெரிக்க டொலர் மாற்று விகிதம், வங்கியின் ஸ்டேர்லிங்-டொலர் விகித மாற்றங்களுக்கேற்ப காலத்திற்குக் காலம் (பின்னிணைப்பு 1-ஆ (11)ற் தரப்பட்டபடி) மாற்றப்பட்டது.

மகாவங்கியின் ஸ்டேர்லிங், இந்திய ரூபாய் மாற்று விகிதங்களில் இவ் வருடம் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை. இவ்விகிதங்களாவன.

| | தந்தி மாற்றுக் கொள்வனவு | தந்திமாற்று விற்பனவு |
|---|---|---|
| ஸ்டேர்லிங் (இலங்கை ரூபாய்க்கு) உடனடி | 1சி. 6 3/64 பெ. உடனடிக்கு எதிராக | 1சி. 6 1/32 பெ. உடனடிக்கு எதிராக |
| எதிர்கால (ஆறுமாதங்கள்வரை) | 1/128 பெ. மாதாந்த கழிவு | 1/128 பெ. மாதாந்த அதிகவிலை. |
| இந்திய ரூபாய்கள் உடனடி | ரூ. 99 3/4 உடனடிக்கு எதிராக | ரூ. 99 13/16 உடனடிக்கு எதிராக |
| எதிர்கால (ஆறுமாதங்கள்வரை) | ரூபாயில் 1/32 மாதாந்த கழிவு | ரூபாயில் 1/32 அதிகவிலை |

மகாவங்கியின் மொத்த அந்நிய நாணய நடமாட்டங்கள் அட்டவணை 11-ல் காட்டப்பட்டுள்ளன. உடனடிக் கொள்வனவுகள் ரூபாய் 4476 இலட்சமாகவும், உடனடி விற்பனவுகள் ரூபாய் 5694 இலட்சமாகவும் இருந்தமை, 1961ம் ஆண்டில் அவை முறையே, ரூபாய் 3421 இலட்சமாகவும், ரூபாய் 5031 இலட்சமாகவும், இருந்தமைக்கு ஒப்பிடத்தக்கது. எதிர்காலக் கொள்

வனவுகள் சம்பந்தமாக ஒப்பந்தம் செய்யப்பட்ட பெறுமதி 2026 இலட்சம் ரூபாய்களாகவும் (1961ம் ஆண்டில் 2218 இலட்சம் ரூபாய்கள்), எதிர்கால விற்பனவுகளின் பெறுமதி 1445 இலட்சம் ரூபாய்களாகவும் (1961ம் ஆண்டில் 616 இலட்சம் ரூபாய்கள்) இருந்தன. கடந்த ஆண்டின் இறுதியில் வெளி நின்றவைகளும் உட்பட்ட எதிர்காலக் கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் ஒப்படைக்கப்படவேண்டிய தொகை 2119 இலட்சம் ரூபாய்களாக வும், எதிர்கால விற்பனவு ஒப்பந்தங்களின் கீழ் ஒப்படைக்கப்பட வேண்டிய தொகை 1337 இலட்சம் ரூபாய்களாகவும் இருந்தன. ஆகவே மொத்தக் கொள்வனவுகளின் தொகை (உடனடியாகவும் எதிர்கால ஒப்பந்தங்களின் கீழும் ஒப்படைக்கப்படவேண்டிய தொகை) 6595 இலட்சம் ரூபாய்களாகவும், மொத்த விற்பனவுகள் 7031 இலட்சம் ரூபாய்களாகவும் இருந்தன.

### நாணய வெளியீடு

இவ்வருடத்தின் போது, காலஞ் சென்ற பிரதமர் திரு. எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவின் படம் பொறிக்கப்பட்ட புதிய 50 ரூபாய் நாணயத்தாள்கள், சுற்றோட்டத்திற்கு விடப்பட்டன. இப்புதிய தாள் முன்னர் வெளியிடப்பட்ட 50 ரூபா நாணயத்தாளை விடச் சிறியதாகும். அதன் அளவு 5 15/16"×3 1/10" உடையதாக இருந்தது.

இந்நாணயத்தாளின் முற்பக்கம் பெரும்பாலும் நீல நிறத்தில், ஒரு நுணுக்கமான பலநிறப்பட்ட வன்னத்தின் மேல் அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த வன்னம் நாணயத்தாளின் நடுப்பகுதியிற் காணப்பட்டு, அதன் மேற் கரைக்கும், கீட்கரைக்கும் பரந்திருக்கின்றது. படம் இத்தாளின் வலது கைப்பக்க மத்தியிலும், ''பேரவைச் சிங்கத்தின்'' நீர்ப்பொறி இடதுகைப் பக்க மத்தியிலும் காணப்படுகின்றன. உலோகத்தினுற் செய்த நூல் ஒன்று இத்தாளின் வலது கைப்பக்கத்தில் நிலைக்குத்தாக அடக்கப்பட்டிருக்கிறது.

இத்தாளின் பிற்பக்கமும், பெரும்பாலும் நீலநிறத்திலேயே அச்சிடப் பட்டிருக்கிறது. இப்பக்கத்தில் சந்திர வட்டக்கல்லினதும், படிகளினதும் உருவம் அமைக்கப்பட்டிருப்பதோடு, வலது கைப்பக்கத்தின் வட்டவடிவ மான மத்தியிலே பல அளவுகளாலான நுண்ணிய எழுத்துக்களும் அச்சிடப் பட்டிருக்கின்றன.

புதிய தாள்களோடு, முன்னர் வெளியிடப்பட்ட அதே இனத்துத் தாள்கள் தொடர்ந்தும் சுற்றோட்டத்தில் இருக்கின்றன.

### வருமானமும் செலவும்

இவ்வருடத்தில் மகாவங்கியின் வருமானம் ரூபாய் 280,50,100.01 சதமாகும். இதே வருடத்தில் உள்ள செலவுகள், நாணயவிதி அதிகாரச் சட்டத்தின் 38-ம் பிரிவிலுள்ளபடி நியமிக்கப்பட்ட ரூபாய் 93,33,848.22 சதம் கொண்ட ஒதுக்குநிதியும் உட்பட ரூபாய் 1,80,50,100.01 சதமாக விளங்கின. 1962ம் ஆண்டு, மார்கழி முடிவில் உள்ளபடியான வங்கியின் மொத்த மூலதனக் கணக்குகள், வங்கியின் மொத்த இருப்புச் சொத்துக் களுக்கும், அந்நிய நாணயங்களாக உள்ள இருப்புச் சொத்துக்களுக்கும் இடையேயுள்ள வேற்றுமையில் 15 சதவீதத்திற்குக் குறைவாக இருந்த மையால், வங்கியின் நிகர ஆதாயமான ரூபா 100 இலட்சமும் நாணயவிதி

அதிகாரச்சட்டத்தின் 39 (ஆ) பிரிவின்படி மூலதன மிகையில் வரவு வைக்கப் பட்டது. தற்போதுள்ள மூலதன மிகையின் தொகை 400 இலட்சம் ரூபாய்களாகும்.

**வங்கி மேற்பார்வைப் பகுதி**

1962ம் ஆண்டில் வங்கி மேற்பார்வைப் பகுதி, நாணயவிதி அதிகாரச் சட்டத்தின் 29(1) பிரிவின்படி; ஆறு வர்த்தக வங்கிகளேயும், அச்சட்டத்தின் 29(2) பிரிவின்படி, நாணயச் சபையின் கட்டளேக்கு இணங்க, வர்த்தக வங்கிகள் அல்லாத ஒரு வங்கித்தாபனத்தையும் பரிசோதனே செய்தது.

மேலும் இப்பகுதி, 1957ம் ஆண்டின் 42-ம் இலக்க ''வங்கிப்பற்றுகள் வரிசட்டத்தை'' நடைமுறைக்குக் கொண்டு வருவது சம்பந்தமாகச் சில பணிகளேயும் தொடர்ந்து ஆற்றி வந்தது.

வங்கிகளிற் கணக்குகள் திறப்பதோடு தொடர்புள்ள, 1961ம் ஆண்டின் 65-ம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் III-ம் பகுதியின் தேவைகளுக்கிணங்க, நிதியமைச்சர் வங்கி மேற்பார்வைப்பகுதி இயக்குநரைத் ''தகுதியுடைய அதிகாரி'' என நியமித்தார்.